MADRAS RECORD OFFICE
22 FEB
EGMORE, MADRAS-8

தமிழகச் சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1967 ஜூன் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப் பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் "வினாக்கள்-விடைகள்". மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடையளிப்பார்கள்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

செயற்கைக் கருமுறை நிலையம், விருதுநகர்

* 30 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி:** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகரில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், செயற்கைக் கரு முறை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், 1966-ல் அதற்காக ஏற்பட்ட செலவுத் தொகை என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம், ஐயா.

(இ) ரூ. 1,88,276·92.

DR. H. V. HANDE: What is the qualification for being considered as Freedom-fighters?

SOME HON. MEMBERS: The hon. Member's supplementary relates to the next question.

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) அவையில் இல்லாத உறுப்பினருடைய வினாவிற்கு விடையளித்தல்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சார், ஒரு வேண்டுகோள். ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன். எந்த உறுப்பினர் கேள்வியைப் போடுகிறாரோ அவர் இந்தச் சபையில் இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கப்பட வேண்டும். அப்படி அவர் இல்லையென்றால் வேறு யாராவது ஒரு உறுப்பினர் அதற்காக அனுமதிபெற்று கேட்க வேண்டும். இனிமேலாவது யார் கேள்வி கேட்கிறார்களோ,

அவர்கள் அல்லது அவர்கள் அனுமதி பெற்ற ஒருவர் இருந்தால் தான் கேள்விக்குப் பதில் அளிக்கலாம் என்ற முறை செய்வது நலமாக இருக்குமென்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றி ஏற்கனவே பல முறை முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கேள்வியை அனுப்பிய உறுப்பினர் அவையில் இல்லையென்றால்கூட எந்த உறுப்பினரும் கேட்கலாம், அனுமதி பெற்றுத்தான் கேட்க வேண்டும் என்பதில்லை என்று ஏற்கனவே தீர்ப்பு இருப்பதால் இந்தக் கேள்வியை யாரும் கேட்கலாம்.

DR. H. V. HANDE : Sir, it is always the custom to call the name of the hon. Member who has given notice of the question, that is, Questions No. 30, hon. Member Thiru K. Cheemaichamy and so on.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்சினை இதோடு போதும். கேள்வியைக் கேளுங்கள்.

1. வினாக்கள்—விடைகள் (தொடர்ச்சி).

THIRU K. VINAYAKAM : May I know from the Government whether the huge expenditure incurred on these artificial insemination centres is commensurate with the services that are obtained by this kind of process?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : எதிர்பார்த்த பலன் கிடைத்திருக்கிறது.

திரு. வெ. முனுசாமி : மதிப்புமிக்க தலைவர் அவர்களே, செயற்கைக் கருமுறைத் திட்டத்தால் எவ்வளவு கால்நடை உற்பத்தியாகி இருக்கிறது? அதனால் ஏற்பட்ட லாபம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நல்ல ஜாதிக் கன்றுகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலும், பால் உற்பத்தியை 33 சத விகிதம் அதிகரிக்க வேண்டுமென்ற அடிப்படையிலும் இந்தத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுகிறது.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : இந்த மாதிரி செயற்கைக் கரு முறை எங்கெல்லாம் அமுலில் இருக்கிறதோ, எங்கெல்லாம் எந்த இனங்கள் அபிவிருத்தி அடைந்து இருக்கின்றனவோ அவற்றை விட்டுவிட்டு இப்போது புதிய இனங்களைக் கலப்பு செய்கிறார்கள். இதைப்பற்றி விவசாயிகளிடமிருந்து எதிர்ப்பு வந்திருக்கிறது. அதை மனதிற்கொண்டு ஏற்கனவே இருக்கும் இனங்களையே உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இது மத்திய சர்க்காரால் உதவி அளிக்கப்படுகிற திட்டம். இதன் மூலம் முர்ரா, சிந்தி, ஜெர்சி போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

திரு. தோ. மு. நல்லசாமி: இன்டென்சிவ் காடில் டெவலப்மென்ட் ப்ரோக்ராம் கால்நடை வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கிறது.